# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

## S.C.No.95/2022

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.21** |
| **Name** | **:** | **திரு. முத்துக்குமார்** |
| **Father's Name** | **:** | **திரு.** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.03.2025.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது கடலூர் மாவட்டம், கடலூர் புதுநகர் காவல் நிலைய வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.10.2021 அன்று ஆரணி கிராமிய காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்த போது, காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. ஷாபூதீன் என்பவர் அரசு மருத்துவமனை தகவல் பெற்று வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக திரு. புருஷோத்தமன், த/பெ. வெள்ளை, பஜனை கோவில் தெரு, விளை கிராமம், ஆரணி என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண்.1238/2021,

சட்டப்பிரிவுகள் 294(பி), 307, 506(2) இ.த.ச. பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், உள்நோயாளியாக இருந்த திரு. புருஷோத்தமன் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்ததை பார்த்து வேலூர் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து இந்த வழக்கினை என் பார்வைக்கு வைத்ததை நான் என் மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

நான் 20.10.2021 அன்று 13.00 மணிக்கு சம்பவ இடமான புருஷோத்தமன் என்பவரின் வீட்டின் மொட்டை மாடியில் சம்பவ இடத்தை சாட்சிகள் சாமிநாதன் மகன் லோகநாதன் மற்றும் ஜெயபால் மகன் வீரமணி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்தேன். பார்வை மகசர் **அ.சா.ஆ.20-**ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.21**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

20.10.2021 அன்றே 13.30 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எரிந்த நிலையிலிருந்த சிறிதளவு தலையணை மற்றும் சிறிதளவு கோரை பாய், சிறிதளவு போர்வை ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றிக் கொண்டேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.22**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. எரிந்த நிலையிலிருந்த சிறிதளவு தலையணை **சா.பொ.2** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. சிறிதளவு கோரை பாய் **சா.பொ.3**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. சிறிதளவு போர்வை **சா.பொ.4**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91-மூலம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 **அ.சா.ஆ.23**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. கண்ணுற்ற சாட்சிகள் குமரேசன், சக்தி ஆனந்தம், சரவணன், பச்சையம்மாள் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துக்

கொண்டேன். பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் லோகநாதன், வீரமணி ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துக் கொண்டேன். மேலும் சாட்சிகள் குணசேகரன், வெள்ளை, சங்கர் ஆகியோரை தனித் தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன்.

மேற்கண்ட வழக்கின் எதிரி ராஜசேகர், த/பெ. வெள்ளை, பஜனை கோவில் தெரு, விளை கிராமம், ஆரணி என்பவரை ரகசிய புலன் வைத்து தேடி வந்த நிலையில், அன்றைய தினமே 20.10.2021 அன்று விளை கிராம நிர்வாக அலுவலர் திருமதி. காயத்திரி மற்றும் உடன் ஊராட்சி மன்ற தலைவர் தணிகாசலம் ஆகியோர் முன்னிலையில் ஆஜராகி அவரிடம் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து வாக்குமூலத்துடன் எதிரியையும், காவல் நிலையத்தில் என்னிடத்தில் 16.30 மணிக்கு ஆஜர் செய்தவர்களை 16.45 மணிக்கு காரணம் கூறி, எதிரி ராஜசேகர், த/பெ. வெள்ளை என்பவரை கைது செய்து மேற்படி அதே சாட்சிகளான விளை கிராம நிர்வாக அலுவலர் திருமதி. காயத்திரி மற்றும் உடன் ஊராட்சி மன்ற தலைவர் தணிகாசலம் ஆகியோர் முன்னிலையில் எதிரி எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலுமின்றி மற்றும் ஆசை வார்த்தைகளின்றி எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

அதில் ஆஜர் எதிரி தன்னை அழைத்து சென்றால், என் அண்ணன் புருஷோத்தமன் மீது பெட்ரோல் ஊற்றி கொளுத்திய இடத்தையும், பெட்ரோல் வாங்க பயன்படுத்திய 2 லிட்டர் தண்ணீர் பாட்டில் வைத்துள்ள இடத்தையும் காண்பிக்கிறேன் என கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.7-ஆக குறியீடுச் செய்யப்பட்டுள்ளது.

20.10.2021 அன்று 18.00 மணிக்கு விளை கிராம நிர்வாக அலுவலர் திருமதி. காயத்திரி மற்றும் உடன் ஊராட்சி மன்ற தலைவர் தணிகாசலம் ஆகியோர் முன்னிலையில் எதிரியுடன் சம்பவ இடத்தை பார்வையிட்டு, அன்றே 18.15 மணிக்கு எதிரியின் வீட்டின் பின்புறத்திலிருந்த கோழிக்கூண்டின் உள் இருந்த பெட்ரோல் வாங்க பயன்படுத்திய 2 லிட்டர் தண்ணீர் பாட்டிலை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி அதில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.8-ஆக குறியீடுச் செய்யப்பட்டுவிட்டது. அந்த 2 லிட்டர் தண்ணீர் பாட்டில் ஏற்கனவே சா.பொ.1-ஆக குறியீடுச் செய்யப்பட்டுவிட்டது. கைப்பற்றப்பட்ட பொருட்களை அன்றைய தினமே படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.24**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

எதிரியை திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவிடம் ஒப்படைத்து அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது. 21.10.2021 அன்று 19.50 மணிக்கு வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த புருஷோத்தமன் என்பவர் இறந்துவிட்டார் என்ற தகவலை பெற்று இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளான 294(பி), 307, 506(2) இ.த.ச. என்பதனை மாற்றி 294(பி), 302 இ.த.ச. பிரிவு என பிரிவு மாற்றம் செய்துக் கொண்டேன். அந்த சட்டப்பிரிவு மாற்ற அறிக்கை **அ.சா.ஆ.25**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

22.10.2021 அன்று காலை வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு

சென்று சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த புருஷோத்தமன் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் வேல்முருகன், பார்த்தீபன், செல்வம், ஜெகதீசன், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் காலை 7.00 மணி முதல் 8.30 மணி வரை பிரேத விசாரணை அறிக்கை செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.26**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு, பிணக்கூராய்வு ஆய்விற்கு முதல் நிலை காவலர் திரு. சீனிவாசன் என்பவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்த அனுப்பி வைத்தேன். மேலும், இறந்து போன புருஷோத்தமனின் தந்தை வெள்ளை, விஜயா மற்றும் ஜெயா ஆகியோரை 22.10.2021 அன்று விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன்.

22.10.2021 அன்று பிரேத விசாரணை முடித்து இறந்து போன புருஷோத்தமன் உடலை அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் சாட்சி சதீஷ், த/பெ. மணிகண்டன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். சாட்சிகள் குமரேசன், பச்சையம்மாள், சரவணன், சக்தி ஆனந்தம், தணிகாச்சலம் ஆகியோர்களுக்கு 164 கு.வி.மு.ச.-வின் படி வாக்குமூலம் பதிவு செய்து கொள்ள ஆரணி, நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.27**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

பட்டியல் சாட்சிகள் குமரேசன், சரவணன், பச்சையம்மாள், சூர்யா, குணசேகரன், சங்கர், தணிகாச்சலம், லோகநாதன், வீரமணி, ரமேஷ் மற்றும் விஜயா ஆகியோர் 161 கு.வி.மு.ச. விசாரணையில் சொன்னது போல் தான் என்னிடமும் வாக்குமூலம் அளித்தார்கள். மேலும் எனக்கு பணி மாறுதல் வந்ததால் நான் வழக்கு

கோப்பினை அதற்கு பின்னர் வந்த காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-</u>**

30.11.2021 அன்று 164 கு.வி.மு.ச.படி வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டுகோள் கடிதம் ஆரணி நீதித்துறை நடுவர் அவர்களிடம் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். சாட்சிகளை விசாரித்து நான் 40 நாட்கள் கழித்து அவ்வாறு வேண்டுகோள் கடிதம் அளித்தது சட்டப்படியாக ஏற்றுக் கொள்ள முடியாதது என்றால் சரியல்ல. பொதுவாக சம்பவ இடத்தை பார்வையிடும் போது, வழக்கிற்கான ஆதாரங்கள் ஏதேனும் உள்ளதா என்று முழுமையாக பார்வையிட வேண்டும் என்றால் சரிதான்.

காலை சம்பவ இடத்தை பார்வையிட்டு நான் பார்வை மகசர் தயார் செய்த போது அந்த பார்வை மகசரில் கோரை பாயோ, தலையணையோ அல்லது போர்வையோ (சா.பொ.2 முதல் சா.பொ.4) இருந்ததாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியது போல் எதிரியை கிராம நிர்வாக அலுவலர் திருமதி. காயத்திரி மற்றும் அ.சா.13ஆக விசாரிக்கப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர் திரு. தணிகாசலம் ஆகியோர் காவல் நிலையத்தில் ஆஜரப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல.

மேற்சொன்ன சாட்சிகளால் ஆஜர்படுத்தப்பட்ட எதிரி அளித்ததகா சொல்லப்படும் வாக்குமூலமும், என் முன்னால் பதிவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் வாக்குமூலமும் ஒரே கணினியில் காவல் நிலையத்தில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட இந்த ஆவணங்களில் இந்திய சாட்சிய சட்டம் 65(பி)ன் படி சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர்

அவர்கள் மேற்சொன்ன 65(பி) சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும் என்பதை பற்றி ஆட்சேபனை தெரிவித்ததால் ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்படுகிறது.

என் புலன் விசாரணையின்படி சம்பவ நேரம் என்பது இரவு 12.30 மணி. தேதி 19.10.2021. 19.10.2021 அன்று இரவு 11.00 மணியளவில் இந்த வழக்கு சம்மந்தமான சம்பவம் நடந்ததாக புகாரிலோ அல்லது என்னிடம் சாட்சிகள் அளித்த சாட்சிய வாக்குமூலங்களிலும் குறிப்பு இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டில் எதிரியின் மனைவி மற்றும் அவருடைய குழந்தைகள், மேலும், 18வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட ரமேஷ் மற்றும் அவரது மனைவி மற்றும் குழந்தைகளுடன் வசித்து வந்ததாக தெரியவருகிறது என்றால் சரிதான்.

20.10.2021 அன்று 12.00 மணியளவில் எங்கள் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்த பின்பு இந்த வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றால் சரிதான், காவல் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையுடன் வேலூர் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு மரண வாக்குமூலம் பதிவு செய்ய கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் நகல் ஆகியவற்றை என் பார்வைக்கு வைத்த பிறகு நான் என் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

நான் என் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பின்பு தொடர்ச்சியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த 15வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட திரு. ஷாபூதீன் என்பவரை விசாரித்து ஏதாவது வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பும் போது திரு. ஷாபூதீன் என்பவர் நீதித்துறை நடுவருக்கு மரண

வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டுகோள் விடுத்த விவரம் பற்றி எனக்கு தெரியும், அதன் நகலும் ஒன்று என்னிடம் அளிக்கப்பட்டது.

நான் அளித்த கைது குறிப்பாணை தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த கைது குறிப்பாணையில் திரு. ஷாபூதீன் என்பவர் நீதித்துறை நடுவருக்கு மரண வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டுகோள் விடுத்த விவரம் பற்றிய குறிப்பு ஏதும் காணப்படவில்லை என்றால் சரிதான். அதே கைது குறிப்பாணையில் கடைசி பத்தியில் கிராம நிர்வாக அலுவலர் திருமதி. காயத்திரி மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் திரு. தணிகாசலம் ஆகியோர்களிடம் எதிரி ஆஜராகி அளித்ததாக சொல்லப்படும் வாக்குமூலத்தை எழுத்து மூலமாக பதிவு செய்ததாக குறிப்பு ஏதும் காணப்படவில்லை என்றால் சரிதான். தனியாக ஒப்புதல் வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

எதிரி கிராம நிர்வாக அலுவலர் திருமதி. காயத்திரியிடம் ஆஜராகி வழக்குச் சம்மந்தமான சங்கதிகள் எதையும் கூறவில்லை என்றாலும், அவ்வாறு உருவாக்கப்பட்ட ஆவணமானது என்னுடைய அறிவுரையின் பேரில் வழக்கிற்காக உருவாக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலான பொருட்கள் வழக்கிற்காக என்னால் புகுத்தப்பட்டவை என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் டயர் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்னுடைய ஆலோசனையின் பேரிலும் அறிவுறுத்தலின் பேரிலும் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 20.10.2021 அன்று மதியம் 1.00 மணியளவிலேயே எதிரியின் வீட்டிலிருந்து எதிரி அவருடைய மற்றொரு சகோதரர்

ரமேஷ், அவருடைய தந்தை வெள்ளை ஆகியோரை காவல் நிலையத்திற்கு நான் அழைத்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் மெத்தை எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை, ஆனால் தலையணை கைப்பற்றப்பட்டது. என்னால் இந்த வழக்கின் புலன் விசாரணையில் இறந்து போனவரின் நண்பர்களான ஜெகதீசன், லாலா மற்றும் மோகன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் விசாரிக்கவில்லை. அதே போன்று எதிரியின் மனைவியையோ அல்லது அவரது சகோதரர் மனைவியையோ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் விசாரிக்கவில்லை.

சாட்சிகளின் வாக்குமூலங்கள், ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் ஆகியவை என்னுடைய ஆலோசனையின் பேரில் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** - இல்லை.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional Sessions Judge,
Arani.